*கவனிக்க.- 2021.04.30 ஆந் திகதிய 2226 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2227 - 2021 මැයි මස 07 වැනි සිකුරාදා - 2021.05.07

*2227 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 730 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2021, மே மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மே மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

729- B82229 - 5,403(2021/05)

# பதவிகள் - வெற்றிடம்

## தென் மாகாண விளையாட்டுத் திணைக்களம்

*விளையாட்டு உத்தியோகத்தர் (முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம்சார் வகுதி 02 சேவைத் தொகையில் தரம் **III**) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புத் செய்தல்*

*தென் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**01. *ஆட்சேர்ப்பு செய்யும் முறை :***

*அறிவித்தலில் குறிப்பிடப்பட்டள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தென் மாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் விளையாட்டு வைத்திய அலகு மூலம் நடாத்தப்படுகின்ற தொழில்சார் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், அதில் சித்தி பெறும் விண்ணப்பத்தாரர்கள் தென் மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையின் முன்னால் மதிப்பீட்டுத் தகைமை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, அந்த தகைமைகளை மதிப்பீடு செய்யும் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்கு அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும். அவ் ஒவ்வொரு பரீட்சையிலும் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய விதம், இவ்வறிவித்தலின் 6 ஆம் இலக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.*

**02. *தேவையான தகைமைகள் :***

I. *கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :*

*(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட மேலும் இரு பாடங்களில் (02 இற்கு) திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*அத்துடன்*

II. *க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்திற்கமைய அனைத்துப் பாடங்களிலும் (பொதுத்தராதர (சா.த.) பரீட்சை தவிர்ந்த) சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது பழைய பாடத்திட்டத்தில் மூன்று (03) பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*அத்துடன்*

*விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற தேசிய ரீதியிலான விளையாட்டு விழாவில் மாகாண மட்டத்தில் (மாவட்டங்களில்) 1 ஆவது அல்லது 2 ஆவது இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*அல்லது*

*தேசிய ரீதியிலான விளையாட்டு விழாவில் 1, 2 அல்லது 3 ஆவது இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*அல்லது*

*விளையாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற தேசியக் கிண்ணப் போட்டியில் 1, 2 அல்லது 3 ஆவது இடத்தைப் பெற்றிருத்தல்.*

*அல்லது*

*(ஆ)*

I. *சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*அத்துடன்*

II. தெற்காசியப் போட்டி, ஆசியப் போட்டி, பொதுநலவாய சபைப் போட்டி, ஒலிம்பிக் போட்டி அல்லது உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக இலங்கையினூடாகப் பங்குபற்றி 1, 2 அல்லது 3 ஆவது இடத்திற்காகப் பதக்கம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட தகைமைகளின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடங்களினுள் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய தொழிற் தேர்ச்சி (NVQ) மட்டம் ஆறு (06) விளையாட்டுத் துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஒன்றைப் பெற்றுக் கொள்வது சேவையை நிரந்தரமாக்குவதற்கு கட்டாயமானதாகும். இத்தேசிய தொழிற் தேர்ச்சி (NVQ) மட்டம் ஆறு (06) விளையாட்டுத் துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஒன்றை முதல் மூன்று வருடத்தினுள் பெற்றுக் கொள்ளாவிடின், உத்தியோகத்தர்களின் சேவை தகுதிகாண் கால முடிவில் நிரந்தரப்படுத்தப்படாததுடன், அவர்களின் சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்தப்படும். அவ்வாறு சம்பள உயர்வை தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர் அவ்வாறு சம்பள உயர்வை தற்காலிகமாக நிறுத்தப்படும் திகதி தொடக்கம் இரண்டு (02) வருட காலத்தினுள் தேசிய தொழில் திறமைசார் (NVQ) ஆறு (06) மட்டத்தில் விளையாட்டுத் துறைக்குரிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி ஒன்றை பெற்று சித்தியடையவில்லை எனின், அவர்களின் நியமனம் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் வினைத்திறனின்மையின் பேரில் தென் மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளரினால் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

***03. அனுபவங்கள் :***

உரிய துறையில் அனுபவங்களைப் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

***04. உடற் தகைமைகள் :***

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்யவும், பதவியின் கருமங்களை நிறைவேற்றுவதற்கும், போதியளவு உள்ளத்தினாலும், உடலினாலும் மதிப்பீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

***05. ஏனைய தகைமைகள் :***

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் விசேட நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

III. தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவராக இருக்க வேண்டியதுடன், குறைந்தது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிட்டிய மூன்று (03) வருடங்கள் தொடர்ந்து நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவர் என கிராம அலுவலரினால் விநியோகிக்கப்படும் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு 02 தொடக்கம் 06 வரையுள்ள அனைத்துத் தகைமைகளும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

***06. வயது எல்லை :***

குறைந்த வயதெல்லை : 18 வருடங்கள்

கூடிய வயதெல்லை : 35 வருடங்கள்

***07. சம்பள அளவுத் திட்டம் :***

2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 ஐக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்று நிருபத்தின் அட்டவணை I இற்கு ஏற்ப இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு ரூ. 30,140.00-10 X 350-11 X 370 - 10 X 560 - 10 X 660 - ரூபா 49,910.00 (MT 02-03-2016) ஆகும். உங்களுக்கு அச்சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டவாறு சம்பளம் வழங்கப்படும். (உதாரணம் 2021.01.01 ஆந் திகதி தொடக்கம் 2021.12.31 ஆந் திகதி வரை ரூபா 30,140.00 அடிப்படைச் சம்பளமும், ரூபா 7,800.00 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும் உரித்தாகும்.)

***08. நேர்முகப் பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட புள்ளிகள் ஒழுங்கு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் :***

(I) தொழில்சார் பரீட்சை :

உடற்தகைமை மதிப்பீட்டிற்காக நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சை மறுதாக்க வேகம், நெகிழும் தன்மை, உதரத்தின் சக்தி, இரு கைகளினதும் சக்தி, அசைவு, நின்று நீளம் பாய்தல், வேகம் மற்றும் தாக்குதல் சக்தி ஆகிய 8 அம்சங்களிலும்

சித்தியடைவதுடன், ஒவ்வொரு பரீட்சையிலும் குறைந்தது 30 புள்ளிகளும், அனைத்து விடயங்களுக்கும் சாதாரணமாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட தொகையிலும் பெற்றிருத்தல் வேண்டும். உடற் தகைமை உரித்தற்ற விளையாட்டுக்காக இது உரியதன்று.

உதாரணம் : கெரம், செஸ், பாரம் தூக்கல், அம்பெறிதல் ஆகியன.

(II) தகைமை மதிப்பீட்டுப் பரீட்சை :

| | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு | ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு | தெரிவு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| 01 | மேலதிகக் கல்வித் தகைமைகள் | 10 | ஏற்புடையதன்று |
| 02 | விளையாட்டுத் திறமைகள் | 70 | |
| 03 | விளையாட்டுப் பயிற்சி அளித்தல், போட்டிகளில் நடுவராக இருத்தல்/போட்டி ஏற்பாடுகள் பற்றிய மேலதிக அனுபவங்கள் | 15 | |
| 04 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமைகள் | 05 | |
| | மொத்தம் | 100 | |

***09. விண்ணப்பதாரரின் அடையாளம் :***

அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தொழில்சார் பரீட்சை மற்றும் உடற்தகைமை மதிப்பீடு பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்டு நிழற்படப் பிரதித் தொகுதியொன்றும் முன்வைக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. ஆட்பதிவு ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
II. பாவனையிலுள்ள வெளிநாட்டுக் கடவுச் சீட்டு

***10. விண்ணப்பங்களை முன் வைத்தல்***

(அ) அனைத்து விண்ணப்பதார்களும் தமது விண்ணப்பங்களை முன் வைக்கும் போது மீள் செலுத்தப்படாத ரூபா 500.00 தொகையொன்றை தொழில்சார் பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். அக்கட்டணம் "செயலாளர், தென் மாகாண விளையாட்டு, கிராம அபிவிருத்தி அமைச்சு ", எனும் பெயரில் காலி, கோட்டை, இலங்கை வங்கியில் நடைமுறையிலுள்ள 1587434 எனும் கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்து உரிய பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைந்து அனுப்புதல் வேண்டும். இலங்கையிலுள்ள எந்தவொரு வங்கிக் கிளையிலும் கட்டணத்தை செலுத்த முடியும்.

(ஆ) விண்ணப்பப்படிவங்கள் 2021.07.30 ஆந் திகதிக்கு முன் "தென் மாகாண விளையாட்டு அமைச்சு, 03 ஆவது மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி" எனும் விலாசத்திற்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் முன் வைக்கப்படல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(இ) முன்வைக்கப்படும் விண்ணப்பபப்டிவத்தின் மாதிரிப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பபடிவங்களை A4 அளவுடைய தாளில் (கடதாசியில்) தயாரித்து, முதலாவது

பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையும், இரண்டாவது பக்கத்தில் இலக்கம் 07 தொடக்கம் 10 வரையும், மூன்றாவது பக்கத்தில் இலக்கம் 11 தொடக்கம் 13 வரையும் அமையும் விதத்தில் தயாரித்து தமது கையெழுத்தினால் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்களை இடும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "தென் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்"' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) விண்ணபப்படிவத்தில் விண்ணப்பதாரரரின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் அதிகாரம் பெற்ற ஓர் அலுவலர் அல்லது ரூ. 47,615.00 இற்கும் கூடுதலான மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் அரசாங்க நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை தாம் சேவை செய்யும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரினூடாக முன்வைக்கப்படல் வேண்டும்.

(எ) இத்துடனுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதல்லாத விணண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணபப்படிவங்கள் அமைச்சுக்குக் கிடைக்க முன்னர், விண்ணப்பப்படிவங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய எந்தவொரு முறையீடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**11. தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல் :**

உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பிழையானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பிற்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்டால், உங்களது விண்ணப்பதாரர் நிலை இரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பிழையான அல்லது தவறான தகவல் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்க அமைவாக அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாமலிருக்கும் உரிமை தென் மாகாண விளையாட்டு அமைச்சுக் குரியதாகும்.

பிமல் இன்த்ரஜித் த சில்வா,
செயலாளர்,
தென் மாகாண விளையாட்டு அமைச்சு.

MS-SP/ADM/FO/54

**தென் மாகாண விளையாட்டு அமைச்சு**

மாதிரி விண்ணப்பப்படிவம்

தென் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு. /திருமதி/செல்வி) :

தமிழில் : ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

ஆங்கிலத்தில் :..............................................................................................

..............................................................................................

..............................................................................................

1.1 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (தெளிவான எழுத்தில் )

தமிழில் : ..................................................................................................................................................
..................................................................................................................................................
..................................................................................................................................................
ஆங்கிலத்தில் :..................................................................................................................................................
..................................................................................................................................................
..................................................................................................................................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................................................................................................................

3. பிறந்த திகதி :
வருடம் : .................................... மாதம் : .................................... திகதி : ....................................

3.1 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : .................................... மாதங்கள் : .................................... நாட்கள் : ....................................

4. பால் (ஆண்/பெண்) (ஆண் - M, பெண் - F ) ☐

5. விவாகமானவர்/விவாகமாகாதவர் பற்றியது : ..................................................................................................................................................

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்தில்) : ..................................................................................................................................................
..................................................................................................................................................
..................................................................................................................................................
..................................................................................................................................................

7. தொலைபேசி இலக்கம் :
நிரந்தரம் : ..................................................................................................

கையடக்கம் :..................................................................................................

8. கல்வித் தகைமைகள் :

8.1 க.பொ.த (உ./த.) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ................................................
II. பரீட்சைச் சுட்டெண் : ................................................................
III. சித்தியடைந்த பாடங்கள்

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

8.1 க.பொ.த (சா./த.) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ...............................................

II. பரீட்சைச் சுட்டெண் : ...............................................................

III. சித்தியடைந்த பாடங்கள்

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9. விளையாட்டு வெற்றிகள் :

| வருடம் | விளையாட்டு விழா | உரிய மட்டம் | | விளையாட்டு | வெற்றிகள்/ பெற்றுக் கொண்ட இடம் |
|---|---|---|---|---|---|
| | | மாகாணம் | தேசிய | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

10. ஏனைய தொழில்சார் தகைமைகள் :

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

11. நீங்கள் எப்போதாவது எந்நவொரு குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா ? ஆம்/இல்லை. ஆம் எனின், விபரிக்கவும்.

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :

I. பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...........................................................................................

II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ...........................................................................................

III. செலுத்திய தொகை : .......................................................................................

| |
|---|
| பற்றுச் சீட்டை கழன்று விடாதவாறு இங்கே ஒட்டவும். |

13. ***விண்ணப்பதாரரின் உறுதியுரை :***

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்தல் உண்மைக்குப் புறம்பானது என நிரூபிக்கப்படுமாயின், நியமிக்கப்பட முன்னர் தகதியற்றவனாவேன் என்பதையும், நியமிக்கப்பட்ட பின்னர் பணிநீக்கம் செய்யப்படுவதற்க ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இங்கே குறிப்பிடப்பட்டள்ள எந்தவொரு தகல்வளையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

........................................ ...............................................................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

14. ***விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :***

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் ............................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் .............. ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 13 ஆம் பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...............................................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி : .........................................................

உறுதிப்படுத்துபவரின் பெயர் : .............................................................

பதவி : .....................................................................................................

விலாசம் : ..................................................................................................

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

15. திணைக்களத் தலைவரின் அத்தாட்சி (அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்காக மாத்திரம்)

15.1 உத்தியோகத்தரின் தனிநபர் கோவையின் பிரகாரம் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அண்மித்த ஐந்து (05) வருடங்களுக்குள், வேலை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமானது/திருப்திகரமற்றது.
சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுள்ளார்/பெறவில்லை.
ஏதேனும் ஒரு வைகயில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படவில்லை/உட்பட்டுள்ளார்.

15.2. விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்படின், தற்போது வகிக்கும் பதவியிலிருந்து இவ்வுத்தியோகத்தரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது. விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்தவில்லை.

........................................ ...............................................................................

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

05-117

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப் பெறாமை முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகர் என்ற முகவரிக்கு அறிவியுங்கள்**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 07.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.04.2021 |
| | | வியாழன் | 13.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.04.2021 |
| | | வெள்ளி | 21.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.05.2021 |
| | | வெள்ளி | 28.05.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.05.2021 |
| **யூன்** | .. | வெள்ளி | 04.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.05.2021 |
| | | வெள்ளி | 11.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.05.2021 |
| | | வெள்ளி | 18.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.06.2021 |
| | | வெள்ளி | 25.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.06.2021 |
| **யூலை** | .. | வெள்ளி | 02.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.06.2021 |
| | | வெள்ளி | 09.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.06.2021 |
| | | வெள்ளி | 16.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.07.2021 |
| | | வியாழன் | 22.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.07.2021 |
| | | வெள்ளி | 30.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.07.2021 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.